பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

22 10 2025 WEDNESDAY 12.40 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று சபரிமலை ஐயப்பன் கோவிலில் தரிசனம் செய்தார்.
2. உலக அளவில் வனப்பரப்பு அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா ஒன்பதாவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.
3. தமிழகத்தில் திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று அதி கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
4. ஹமாஸ் அமைப்பினர் ஆயுதங்களை கைவிட மறுத்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்க துணை அதிபர் J D Vance தெரிவித்துள்ளார்.
5. இந்தோனேஷியா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Devika Sihag காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று சபரிமலை ஐயப்பன் கோவிலில் தரிசனம் செய்தார்.

கேரளாவுக்கு நான்குநாள் பயணமாக சென்றுள்ள குடியரசுத் தலைவர், சபரிமலை ஐயப்பன் கோவிலில் இருமுடி கட்டி 18 படிகளில் ஏறி சுவாமி தரிசனம் செய்தார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமக்கு தீபாவளி வாழ்த்து தெரிவித்த அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்புக்கு நன்றி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தொலைபேசி வாயிலாக திரு டொனால்டு ட்ரம்ப் பேசியதாக கூறியுள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையிலான நட்புறவை வலுப்படுத்துவது குறித்து அமெரிக்க அதிபரிடம் தாம் பேசியதாக அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் எந்த வடிவில் இருந்தாலும், அதனை இரு நாடுகளும் இணைந்து முறியடிப்பதற்கான முயற்சிகள் குறித்தும் அமெரிக்க அதிபரிடம் பேசியதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப், வெள்ளை மாளிகையில், அமெரிக்காவாழ் இந்தியர்களிடையே இணைந்து தீபாவளி பண்டிகையை குத்துவிளக்கேற்றி கொண்டாடினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி உயர்ந்த மனிதர் என்று அப்போது குறிப்பிட்ட திரு ட்ரம்ப், தமது நெருங்கிய நண்பர் என்றும் கூறினார்.

இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக உறவுகள் மற்றும் மண்டல அமைதிக்கான நடவடிக்கைகள் தொடரும் என்றும் திரு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவின் பிறந்தநாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள செய்தியில், பொதுவாழ்வில் அர்ப்பணிப்பு உணர்வோடு கடமையாற்றி வருபவர் திரு அமித் ஷா என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த அரிய முயற்சிகளை எடுத்துள்ள திரு அமித் ஷா, நீண்ட காலம் வாழ வேண்டும் என இறைவனை பிரார்த்திப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகனும், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்காக தொலைநோக்கு பார்வையுடன் அயராது பாடுபடுபவர் திரு அமித் ஷா என்று கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

மத்திய அரசின் திட்டங்கள் மூலம், உலக அளவில் வனப்பரப்பு அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா ஒன்பதாவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தோனேஷியாவின் Bali-யில் உணவு வேளாண் அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின், அன்னையின் பெயரில் மரம் நடுவோம் என்ற திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

இந்திய கடற்படை தளபதிகள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்கியது.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் இந்திய கடற்படையின் முக்கிய பங்கை போற்றும் வகையில் இந்த மூன்றுநாள் மாநாட்டில் பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட உள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், நாளை இந்த மாநாட்டில் உரையாற்றவுள்ளார்.

கடற்படை தலைமை தளபதி மற்றும் உயரதிகாரிகள், இந்திய பெருங்கடல் பகுதியின் பாதுகாப்பு நிலைமை குறித்து ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

ராணுவம், விமானப்படை, கடலோர காவல்படையுடன் இணைந்து இந்திய கடற்படை செயல்படுவது குறித்து இந்த மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பிருந்தாவனம் அருகே சரக்கு ரயில் நேற்றிரவு தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

மதுரா – பல்வல் ரயில் நிலையங்களுக்கு இடையே ரயில் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், பல்வேறு பயணியர் ரயில்கள் மாற்று வழித்தடத்தில் இயக்கப்படுவதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

ரயில்பாதை சீரமைப்புப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் ரயில்வே கூறியுள்ளது.

<<<<<<>>>>>

தமிழக கடற்கரையையொட்டிய தென் மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, வடமேற்கு திசையில் நகர்ந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் - 90 Sec. )*

<<<<<<>>>>>

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாநில உணவுத்துறை அமைச்சர் திரு சக்ரபாணி இன்று நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட ஆயிரத்து 250 நெல் மூட்டைகள் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு அங்குள்ள கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நெல் கொள்முதலுக்கு தேவையான சாக்குப்பைகள் அனைத்தும் நேரடி கொள்முதல் நிலையங்களிலும் வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளதையும் அமைச்சர் திரு சக்ரபாணி சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனடியாக கிடங்குகளுக்கு அனுப்பி வைக்காததால், அதிக அளவில் நெல் மூட்டைகள் நேரடி கொள்முதல் நிலையங்களிலேயே தேங்கியிருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தஞ்சை மாவட்டம் காட்டூரில் இன்று அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசினார்.

உரிய பாதுகாப்பு இல்லாததால் நெல் மூட்டைகள் நனைந்து வீணாவதாகவும் அவர் கூறினார்.

*விவசாயிகள் கொண்டுவரும் நெல்லை முழுவதுமாக கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய திரு எடப்பாடி பழனிசாமி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.*

*<<<<<<>>>>>*

*ஹமாஸ் அமைப்பினர் ஆயுதங்களை கைவிட மறுத்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்க துணை அதிபர் J D Vance தெரிவித்துள்ளார்.*

*இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு-வுடன், போர் நிறுத்தம் குறித்து பேசி வரும் திரு Vance, காஸாவில் உள்ள வெளிநாட்டு படைகள் குறித்து இஸ்ரேல் உரிய முடிவு எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.*

*போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.*

*பிணை கைதிகளை விடுவிப்பது போன்ற விஷயங்கள் தாமதமாவதால் போர் நிறுத்தத்தை முற்றிலுமாக நடைமுறைப்படுத்துவதில் சில சங்கடங்கள் ஏற்பட்டுள்ளதை புரிந்துகொள்ள முடிவதாக திரு J D Vance தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*தென்கொரியாவில் ஆசிய பசிபிக் ஒத்துழைப்பு உச்சி மாநாடு இம்மாதம் 31-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், வடகொரிய குறைந்த தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை இன்று சோதித்து பார்த்துள்ளது.*

*இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப், சீன அதிபர் திரு Xi Jinping உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்துகொள்கிறார்கள்.*

*<<<<<<>>>>>*

*இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Devika Sihag காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-8, 21-15 என்ற செட் கணக்கில், Macao நாட்டின் Chi Wa Pui -ஐ வென்றார்.*

*இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் Isharani Baruah -வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

----------------

*புரோ கபடி லீக் ஆட்டத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் ஹரியானா – தெலுகு அணியையும், பெங்களுரு – பெங்கால் அணியையும், தில்லி – பாட்னா அணியையும் எதிர்கொள்கின்றன*

*<<<<<END>>>>>*